# மாதிரி வினாத்தாள் - 2019-20

## மேல்நிலை இரண்டாம் ஆண்டு

## சிறப்புத்தமிழ்

நேரம் : 15 நிமிடங்கள் + 2.30 மணி　　　　　　　　மொத்த மதிப்பெண்கள் : 70

அறிவுரைகள் : 1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவேண்டும். படங்கள் வரைவதற்குப் பென்சில் பயன்படுத்தவும்

### பகுதி – I

குறிப்பு: (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.　　　　15 ×1=15

(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. உவகை என்னும் மெய்ப்பாடு தோன்றும் களமாகத் தொல்காப்பியர் குறிப்பிடுவது.

அ) பெருமை　　ஆ) புதுமை　　இ) கொடை　　ஈ) விளையாட்டு

2. “தாமிருந்த கோடு குறைத்து விடல்“ இப்பழமொழியின் பொருள்

அ) தன் வீட்டிலுள்ள சுற்றத்தாரை வெளியேற்றல்

ஆ) தன் எதிரிகளைக் குறைத்து மதிப்பிடல்

இ) தான் தங்கியிருக்கும் வீட்டின் உயரத்தைக் குறைத்தல்

ஈ) தான் தங்கியிருக்கும் கிளையை வெட்டித் தானும் வீழ்ந்து உயிர்விடல்

3. பொருத்துக.

அ) சம்பந்தர்　　-　　1) தோழமை நெறி

ஆ) குலசேகர ஆழ்வார்　　-　　2) பிள்ளைமை நெறி

இ) சுந்தரர் - 3) அடிமை நெறி

ஈ) திருமங்கையாழ்வார் - 4) நாயக நாயகன் நெறி

அ) அ – 2, ஆ – 1, இ – 4, ஈ – 3 ஆ ) அ – 3, ஆ – 1, இ – 2, ஈ – 4

இ) அ – 2, ஆ – 3, இ – 1, ஈ – 4 ஈ ) அ – 1, ஆ – 2, இ – 3, ஈ – 4

4. கீழ்க்காணும் கூற்றையும் அதன் காரணத்தையும் படித்துச் சரியான விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

கூற்று – குடிமக்கள் காப்பியம் என்று சிலப்பதிகாரம் அழைக்கப்படுகிறது.

காரணம் – குடிமக்கள் ஆட்சியை இக்காப்பியம் வலியுறுத்துகிறது.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று சரி, காரணமும் சரி

இ) கூற்று தவறு, காரணம் சரி ஈ ) கூற்று தவறு, காரணமும் தவறு

5. சொற்றொடர் நிலை என்பது

அ) பரணி ஆ) கலம்பகம் இ) அந்தாதி ஈ) தூது

6. தமிழின் செவ்வியல் தன்மைக்குச் சான்றாக விளங்குபவை

அ) இடைக்கால இலக்கியங்கள் ஆ) பக்தி இலக்கியங்கள்

இ) சங்க இலக்கியங்கள் ஈ) இக்கால இலக்கியங்கள்

7. தமிழின் முதல் புதினமாக அறியப்படுவது

அ) கமலாம்பாள் சரித்திரம் ஆ) பத்மாவதி சரித்திரம்

இ) பிரதாப முதலியார் சரித்திரம் ஈ) ராஜசேகர சரித்திரம்

8. சரியாகப் பொருத்தப்பட்ட விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

அ) இலட்சியவாதப் புதினம் - 1) பஞ்சும் பசியும்

ஆ) வரலாற்றுப் புதினம் - 2) அறுவடை

இ) முற்போக்குப் புதினம் - 3) அகல்விளக்கு

ஈ) வட்டார வழக்குப் புதினம் - 4) பொன்னியின் செல்வன்

அ) அ – 3, ஆ – 4, இ – 1, ஈ – 2 ஆ) அ – 4, ஆ – 3, இ – 2, ஈ – 1

இ) அ – 1, ஆ – 4, இ – 3, ஈ – 2 ஈ) அ – 2, ஆ – 3, இ – 4, ஈ - 1

9. நாடகவியல் என்னும் நூலின் ஆசிரியர்

அ) சங்கரதாச சுவாமிகள் ஆ) பரிதிமாற் கலைஞர்

இ) பம்மல் சம்பந்தனார் ஈ) மதுரகவி பாஸ்கர தாஸ்

10. கீழ்க்காணும் கூற்றுகளைப் படித்துச் சரியான விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

1) இலக்கியவாதியாகவும் திரைப்படக் கலைஞராகவும் சாதித்தவர் ஜெயகாந்தன்.

2) திரைப்படம் ஒரு காட்சிமொழி என்பதை உணர்ந்தவர் பாலுமகேந்திரா.

3) ஒளிப்பதிவாளராக இருந்து இயக்குநரானவர் மகேந்திரன்.

4) ஒளிப்பதிவாளர், இயக்குநர், எழுத்தாளர், நடிகர் எனப் பன்முக தன்மை கொண்டவர், தங்கர் பச்சான்.

அ) கூற்று 1, 2, 4 சரியானவை ஆ) கூற்று 1, 2, 3 சரியானவை

இ) கூற்று 1, 3, 4 சரியானவை ஈ) கூற்று 2, 3, 4 சரியானவை

11. சரியான இணையைத் தேர்ந்தெடுக்க.

அ) ஏழாம் உலகம் – அரவான் ஆ) எரியும் பனிக்காடு – நான் கடவுள்

இ) காவல் கோட்டம் - பரதேசி ஈ) லாக்கப் - விசாரணை

12. பின்வரும் கூற்றையும் காரணத்தையும் படித்துச் சரியான விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

கூற்று – ஆங்கிலமொழி, உட்பிணைப்பு நிலையைச் சார்ந்தது.

காரணம் – ஆங்கில மொழியில் அடிச்சொற்கள் இரண்டு சேரும்போது, ஒன்று சிதைந்தும் மற்றொன்று சிதையாமலும் நிற்கும்.

அ) கூற்று சரி, காரணம் தவறு. ஆ) கூற்று, காரணம் இரண்டும் தவறு.

இ) கூற்று , காரணம் இரண்டும் சரி. ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

13. சொற்கள் பொருளுணர்த்தும் தன்மை குறித்து ஆராய்வது

அ) தொடரியல் ஆ) உருபனியல் இ) பொருண்மையியல் ஈ) ஒலியனியல்

14. ரேடியோ என்ற சொல்லுக்கு 'வானொலி' என்ற தமிழ்க் கலைச்சொல்லை உருவாக்கி அளித்தவர்

அ) வெ. நல்லதம்பி ஆ) தென்கச்சி. கோ. சுவாமிநாதன்

இ) டி. கே. சிதம்பரனார் ஈ) டி. கே. பட்டம்மாள்

15. சரியாகப் பொருத்தப்பட்டுள்ள விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

| | | |
|---|---|---|
| அ) பொன் விளையும் பூமி | – | 1) சிறுவர் நிகழ்ச்சிகள் |
| ஆ) கண்மணிப் பூங்கா | - | 2) நேயர் கடிதங்கள் |
| இ) எதிரொலி | - | 3) நன்னெறிக் கதைகள் |
| ஈ) இன்று ஒரு தகவல் | - | 4) வேளாண் நிகழ்ச்சிகள் |

அ) அ – 4, ஆ – 1, இ – 2, ஈ – 3 ஆ) அ – 2, ஆ – 1, இ – 4, ஈ – 3

இ) அ – 2, ஆ – 4, இ – 1, ஈ – 3 ஈ) அ – 4, ஆ – 2, இ – 3, ஈ - 1

16. மற்றவற்றுடன் தொடர்பில்லாத ஒன்றைத் தேர்ந்தெடுக்க.

அ) தகவல் மீட்பு ஆ) தகவல் பிரித்தெடுத்தல்

இ) பனுவல் சுருக்கம் ஈ) எந்திர மொழிபெயர்ப்பு

17. தமிழை உருபனியல் பகுப்பாய்வுக்கு உட்படுத்துவது சற்றுக் கடினமான செயல். ஏனெனில், அது

அ) கூட்டுநிலை மொழி ஆ) ஒட்டுநிலை மொழி

இ) பிரிநிலை மொழி ஈ) தனிநிலை மொழி

18. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) 5 ஜி | - | 1) இயக்கமுறைமை |
| ஆ) விண்டோஸ் | - | 2) 1 மில்லி செகண்ட் |
| இ) செயலி | - | 3) காணொலி விளையாட்டு |
| ஈ) பாம்பு | - | 4) பயன்பாட்டு மென்பொருள் |

அ) அ -3, ஆ – 4, இ – 1, ஈ - 2

ஆ) அ -4, ஆ – 3, இ – 2, ஈ - 1

இ) அ -1, ஆ – 4, இ – 3, ஈ - 2

ஈ) அ -2, ஆ – 1, இ – 4, ஈ - 3

19. "வியலென் கிளவி சுட்டும் பொருள்"

அ) அகலம் ஆ) ஆழம் இ) நீளம் ஈ) உயரம்

20. "இலக்கியம் சிறந்ததா அல்லது குறையுடையதா என்பதைக் காண்பதே திறனாய்வு" எனக் கூறியவர்

அ) மேத்யூ ஆர்னால்டு ஆ) சி. டி. வின்செஸ்டர்

இ) விக்டர் யூகோ ஈ) ஸ்பிங்கான்

## பகுதி - ஆ

II. பின்வருவனவற்றுள் எவையேனும் ஏழு வினாக்களுக்கு 20 சொற்களுக்குமிகாமல் விடையளிக்க.

வினா எண் 24 க்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 7X 2 = 14

21. சிற்றிலக்கிய வகைகளுள் எவையேனும் நான்கு எழுதுக.
22. சாகித்திய அகாதெமி விருதுகள் பெற்ற புதினங்களுள் எவையேனும் நான்கைக் குறிப்பிடுக.
23. "காலில் குத்தாத கம்பளி உறை நான் தருகிறேன்" – யார், யாரிடம் கூறியது?
24. நும் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள 'கல்மரம்' என்னும் கதையைக் கீழ்க்காணும் தலைப்புகளில் அட்டவணைப்படுத்துக.

    (1) கதைக்கருவைத் தேர்ந்தெடுத்த முறை (2) கதையின் மொழிநடை
25. நாடகத் துறையின் புதிய பரிமாணத்திற்குக் காரணமாக அமைந்தவர்கள் யாவர்?
26. தமிழின் தொன்மைச் சிறப்புக்குச் சான்றுகள் இரண்டு தருக.
27. ஒலிச்சூழல் அடிப்படையில், சொற்கள் எவ்வாறு பொருள் உணர்த்துகின்றன?
28. மின்னணு ஊடகங்கள் என்று அழைக்கப்படுபவை எவை?
29. பதிப்புரிமைச் சட்டம் என்றால் என்ன?
30. கணினியிலிருந்து திறன்பேசி எவ்வாறு வேறுபடுகிறது?

## பகுதி - இ

III. பின்வருவனவற்றுள் எவையேனும் ஏழு வினாக்களுக்கு 30 சொற்களுக்குமிகாமல் விடையளிக்க.

வினா எண் 40 க்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 7 X 3 = 21

31. ஓரையாடுதல் – குறிப்பு வரைக.
32. ஒழுக்கமுடையாரும் அஃது இல்லாதாரும் எய்தும் நிலையாக விவேகசிந்தாமணி குறிப்பிடுவது யாது?
33. வாழ்க்கைத் திருவிளையாடல் என்று ஹெப்சிபா ஜேசுதாசன் விளக்குவது யாது?
34. புதினம் எழுதுதலில் பின்னோக்கு, முன்னோக்கு உத்திகள் குறித்து எழுதுக.
35. தமிழ்த்திரைப்படத் துறையின் வளர்ச்சிக்கு நாடகத்துறையின் பங்களிப்பு குறித்து எழுதுக.
36. ஆவணப்படம் குறித்து எழுதுக.
37. இயல்பான அகராதி – வேர்ச்சொல் அகராதி வேறுபடுத்துக.
38. திறனாய்வாளர் பெற்றிருக்க வேண்டிய தகுதிகள் யாவை?
39. நடமாடும் ஒலி – ஒளிப்பதிவுக் கூடம் என்றால் என்ன?
40. இ – பப் அமைப்பில் சேர்க்கப்பட்ட சிறப்பான வசதிகள் மூன்றைச் சுட்டுக.

## பகுதி - ஈ

IV. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் 50 சொற்களுக்குமிகாமல் விடையளிக்க.
7 X 5 = 35

41. தமிழ்க்கவிதையின் போக்குகள் குறித்து விவரிக்க.

(அல்லது)

நபிகள் நாயகத்தின் பெருமையை உமறுப்புலவர் எவ்வாறு விளக்குகிறார்?

42. புதினங்களில் நவீனத்துவம், பின்நவீனத்துவம் குறித்து விவரிக்க.

(அல்லது)

வாழ்வின் சிறு சிறு பிரச்சனைகளை நேர்மறையாக எதிர்கொள்ளும் மனப்பாங்கே சிறந்தது – இக்கூற்றைப் பங்கஜம் கதாபாத்திரத்தின்வழி ஆராய்க.

43. புதினம் எழுதும் உத்திகளை வகைப்படுத்துக.

(அல்லது)

சாயாவனம் புதினத்தில் சிதம்பரம், கரும்பு ஆலை நிறுவ, வனத்தை அழித்து மேற்கொண்ட முயற்சிகளை உம் பார்வையில் மதிப்பிடுக.

44. நவீன நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து விவரிக்க.

(அல்லது)

திரைப்படத் தயாரிப்பில் கலைநுட்பங்களுக்கு அளிக்கப்படும் முதன்மை குறித்து விளக்குக.

45. திராவிட மொழிகளும் ஆங்கிலமும் தொடரமைப்பில் மாறுபடுவதை எவையேனும் ஐந்து எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

(அல்லது)

திறனாய்வினால் விளையும் பயன்கள் யாவை?

46. வானொலி மற்றும் தொலைக்காட்சியின் பொது அமைப்பு குறித்து விளக்குக.

(அல்லது)

ஊடகச் சட்டங்களுள் எவையேனும் ஐந்து குறித்து எழுதுக.

47. செல்பேசியில் மென்பொருளின் பங்கு குறித்து விவரிக்க.

(அல்லது)

எவையேனும் மூன்று மொழிப் பயன்பாட்டுக் கருவிகள் குறித்து விளக்குக.

20/8/19
(K. Srinivasan)

20/8/2019